# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 11.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 1245/D/2020**

திரு அ. அப்துல் அஜீஸ் --- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / தலைமையாசிரியர்,
அரசு முஸ்லிம் உருது உயர்நிலைப்பள்ளி, --- பொது அதிகார அமைப்பு
செஞ்சி, விழுப்புரம் மாவட்டம்.

பார்வை:

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 28.10.2019 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 12.12.2019 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 28.11.2019 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 03.12.2019 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 03.02.2020 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (11.11.2020) தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலர் திருமதி. ந.லலிதா, தலைமையாசிரியர், அரசு முஸ்லீம் உருது உயர்நிலைப்பள்ளி, செஞ்சி, விழுப்புரம் மாவட்டம் இவரை தொலைபேசி வாயிலாக பலமுறை முயன்றும் தொடர்பு கொள்ள இயலவில்லை மற்றும் மனுதாரரின் மனுவில் தொலைபேசி / அலைபேசி எண் குறிப்பிடப்படாததால் இன்றைய விசாரணையில் அவரையும் தொடர்பு கொள்ள இயலவில்லை.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் செஞ்சி மாவட்டக்கல்வி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், சம்பந்தப்பட்ட பள்ளியின் அளவைப்பதிவேடு, பள்ளியில் பணிபுரியும் தலைமையாசிரியரின் பணிநியமன ஆணை, தலைமையாசிரியரால் பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்படும் பாடங்களின் விவரம், தலைமையாசிரியர் மற்றும் உதவி பட்டதாரி

ஆசிரியர்களின் அக்டோபர் 2019-ம மாதச்சம்பளப் பதிவேட்டின் நகல், பள்ளியில் பட்டாதாரி அறிவியல் ஆசிரியர் பணியிடம் பணி நியமனம் செய்யப்படாத நிலையில் அறிவியல் ஆய்வக உதவியாளர் பணிபுரியும் பணியின் விவரம், 01.06.2016 முதல் 31.10.2019 வரை பள்ளியில் நடத்தப்பட்ட கூட்ட அறிக்கை மற்றும் தீர்மானங்களின் நகல், செஞ்சி ஊராட்சி ஒன்றிய முஸ்லீம் உருது தொடக்கப்பள்ளி நடைபெறுவதற்கு கல்வித்துறை அதிகாரிகளால் அனுமதி வழங்கப்பட்ட அரசு ஆணையின் நகல், இப்பள்ளியில் ஆசிரியர் அல்லாத பணிபுரியும் பணியாளர்களின் முழு விவரம், பள்ளியின் மின்இணைப்பு செலுத்தப்பட்ட விவரம், பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு அரசால் வழங்கப்பட்ட கல்வி உதவித்தொகை விவர நகல், இலவச உருது வழி பாடப்புத்தகங்கள் அரசால் பெற்று வழங்கப்பட்ட விவரம், பள்ளி பராமரிப்பு தொடர்பான வரவு செலவு விவரம், இப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை விவரம், உருது மொழி வழி உயர்நிலைப் பயிற்றுப் பள்ளியில் உருது மொழி வழி கற்பித்தலுக்கு மாறாக ஆங்கில மொழி வழி கற்பித்தல் நடைபெற அரசால் பெறப்பட்ட ஆணை நகல் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 15 இனங்களில் ஆவண நகல்கள் மற்றும் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (11.11.2020) தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில், பொதுத் தகவல் அலுவலரை தொலைபேசி வாயிலாக பலமுறை முயன்றும் தொடர்பு கொள்ள இயலவில்லை மற்றும் மனுதாரரின் மனுவில் தொலைபேசி / அலைபேசி எண் குறிப்பிடப்படாததால் இவ்விசாரணையில் இருவரையும் தொடர்பு கொள்ள இயலாத நிலையில், இவ்வழக்கின் விசாரணையை எதிர்வரும் 02.12.2020 அன்று முற்பகல் 11.30 மணிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. அன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் விழுப்புரம் மாவட்டம், அரசு முஸ்லீம் உருது உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் மற்றும் மனுதாரர் ஆகியோர் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது. இவ்வழக்கு தொடர்பாக விளக்கங்கள் தேவைப்படின் இவ்வாணையத்தின் 9499933592 என்ற அலைபேசி எண் அல்லது தொலைபேசி எண்.044-24358015 வாயிலாக தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 1245/D/2020</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் / தலைமையாசிரியர்,
அரசு முஸ்லிம் உருது உயர்நிலைப்பள்ளி,
செஞ்சி, விழுப்புரம் மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**

திரு அ. அப்துல் அஜீஸ்,
அரசினர் முஸ்லீம் உருது உயர்நிலைப்பள்ளி,
செஞ்சி, எண்.33/14 A, ஜாபர் பேக் தெரு,
கிருஷ்ணாபுரம், செஞ்சி - 604 202.

Copy to: File
SNPA 13.11.2020